2013 ஏப்ரல் 29]

மின்சாரம் வழங்க பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 337, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

337—

சாலைகள் மேம்பாடு

*7820—**திரு. வி. சோமசுந்தரம்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து ஊராட்சி சாலைகளையும் அகலப்படுத்தி தரம் உயர்த்தும் செயற்றிட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் இருத்திய விடையை அளிக்கின்றேன்.

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் 97,083.00 கிலோ மீட்டர் கிராம ஊராட்சி சாலைகள், 31,105.63 கிலோ மீட்டர் ஊராட்சி ஒன்றிய சாலைகள் ஆக மொத்தம் 1,28,188.63 கிலோ மீட்டர் ஊரகச் சாலைகள் உள்ளன. ஊரகச் சாலைகள் தொகுப்பின் அடிப்படையில், தார்ச் சாலைகள் அல்லாத அனைத்து சாலைகளையும் மேம்படுத்த விரிவான சாலை மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அடுத்த மூன்று ஆண்டுகளில் 36,930 கிலோ மீட்டர் சாலைகள் ரூ.5743 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த நிதியாண்டில் பல்வேறு

திட்டங்களின்கீழ் 9,285 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் ரூ.1,432 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.

திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கே இல்லாமை இல்லாத நிலை வேண்டும்' என்ற இலட்சியத்தோடு நல்லாட்சி செய்து வருகின்ற எங்கள் ஆராதனைக்குரிய தெய்வம், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த நல்லாட்சியிலே, சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள புறநகர்ப் பகுதிகளில், குறிப்பாக எங்களது காஞ்சிபுரம் தொகுதிக்குட்பட்ட பல்வேறு ஊராட்சிகளிலே, தொழிற்சாலைகளும், அடுக்குமாடிக் குடியிருப்புகளும் அசுர வேகத்திலே வளர்ந்து வருகின்றன. இப்படிப்பட்ட தொழிற்சாலைகள் உருவாகின்றபோது, அந்தத் தொழிற்சாலைகளுக்கு அதிக வாகன சேவைகள் ஏற்படுகின்றன. அப்படி Taurus லாரி, டிப்பர் லாரி போன்ற அதிக பாரம் கொண்ட பல்வேறு வாகனங்கள் எல்லாம் அந்தப் பகுதியிலே அந்த ஊராட்சிச் சாலைகளிலே போகின்றபோது, பல இன்னல்கள், இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. ஆகையினாலே, இதைக் கருத்திலே கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே அந்த ஊராட்சி சாலைகளையெல்லாம் அகலப்படுத்தி, தரமுயர்த்திக் கொடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கூறியுள்ளார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றிதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. திவாகரன் அவர்கள்.

திரு. க. திவாகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு இந்தத் துறையின் சார்பாக ஒரு வேண்டுகோள். இன்றைய தினம் தமிழகம் முழுவதும் மழை பொய்த்திருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், இயற்கை சுற்றுச்சூழல் பாதித்திருக்கின்றது. இதற்குக் காரணம் மரங்கள் முழுவதும் வெட்டப்படுகின்றன. உள்ளாட்சித் துறை மூலமாக ஒவ்வொரு ஊராட்சியிலும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. திவாகரன், மூல வினாவிற்குத் தொடர்புடைய கேள்வியைக் கேளுங்கள்.

திரு. க. திவாகரன்: மக்களுக்குத் தேவையானதுதான். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மக்களுக்குத் தேவையானதுதான். தனிக் கேள்வி போடுங்கள்.

திரு. க. திவாகரன்: நீங்கள் மரக் கன்றுகள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. திவாகரன், தனிக் கேள்வி போடுங்கள். இதுசம்பந்தமாக கேள்வி கேட்கிறீர்களா? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிச் சாலைகளை மேம்படுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் சிறப்பான நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். அதேபோலவும், ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி உசிலம்பட்டியிலிருந்து குமுளி வரை இருக்கிறது. தமிழ்நாட்டில் மிக நீண்ட பெரிய தொகுதி, ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி. அந்தத் தொகுதியில் கிராமச் சாலைகள் நிறைய இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் நிதியை ஒதுக்கினாலும்கூட, கிராமச் சாலைகள் அதிகமாக இருக்கின்ற எனது சட்டமன்றத் தொகுதிக்குக் கூடுதல் நிதி ஒதுக்கினால் நன்றாக இருக்கும் என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காஞ்சிபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவித்து அமர்ந்திருக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்பு, சென்னை மாநகராட்சியின் சுற்றுப் பகுதிகளில் பல்வேறு தொழிற்சாலைகள் வந்திருக்கின்றன. அதோடு மட்டுமல்லாமல், பணி புரிய வருகின்றவர்கள் தங்குவதற்குப் புதிய, புதிய அடுக்குமாடிக் கட்டடங்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதனடிப்படையிலே மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பிரத்யேகமாக இதுபோன்று வளர்ந்து வருகின்ற பகுதிகள் ஊராட்சிச் சாலைப் பகுதிகளில் அமைந்திருக்கின்ற காரணத்தினால், ஊராட்சிச் சாலைகளை மேம்படுத்த வேண்டுமென்று உத்தரவும் பிறப்பித்திருக்கிறார்கள். பொதுவாக ஊராட்சிச் சாலைகள், ஊராட்சி ஒன்றியச் சாலைகளுடைய அகலம் 6 மீட்டர்தான் என்று இருக்கிறது. பாலங்கள் கட்டப்படுகின்ற நேரத்தில், பாலத்திற்குத் தேவை ஏற்படுகின்ற நேரத்தில் 7 மீட்டராக மாற்றி அமைக்கப்படுகிறது. இருந்தாலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆணையின்பேரில் பெருநகர்ப் பகுதியிலே இருக்கின்ற சுற்றுக் கிராமங்களில் பல தொழிற்சாலைகள் வருகின்ற காரணத்தினால், இந்தப் பாதைகளை அகலப்படுத்துவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆண்டிப்பட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள் ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையைப் பரிசீலனை செய்து, குறுகலான அகலத்தில் சாலைகள் இருக்கின்றபட்சத்தில், அந்தச் சாலைகள் நிச்சயமாக எடுத்துக்கொள்ளப்பட்டு மேம்படுத்தப்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நெடுஞ்சாலைகளுக்கு இணையாக ஊராட்சிச் சாலைகள் மேம்படுத்தப்படும் என்ற நல்ல செய்தியினை அறிவித்திருக்கிறார்கள். ஊராட்சிச் சாலைகளெல்லாம் செப்பனிடப்படும் என்று மக்களெல்லாம் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்த வாய்ப்பை நிறைவேற்றித் தருவதற்குத் திட்டம் அறிவித்திருக்கிற இந்த நல்ல வேளையில், மதுரை மாவட்டம், திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட டி. கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியம், கிளாங்குளம் சாலை, கவசக்கோட்டை சாலை, கள்ளிக்குடியிலிருந்து சோளம்பட்டி செல்லக்கூடிய சாலை, திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம், மேலக்கோட்டை சாத்திரிபுரம் செல்லக்கூடிய சாலை ஆகியவை ஊராட்சி ஒன்றியச் சாலைகள்; அதிக போக்குவரத்து நிறைந்த அந்தச் சாலைகள் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தவாறு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே அந்த ஊராட்சி சாலைகளைப் புதுப்பித்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எப்போதுமே யதார்த்த நிலையிலேயும், உண்மை நிலையிலேயும் ஆட்சி செய்கின்றவர்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நான் சொன்னதாக ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். நெடுஞ்சாலைத் துறை சாலைகளுக்கு இணையாக ஊராட்சி ஒன்றியச் சாலைகளை மேம்படுத்த வேண்டுமென்று சொன்னார். நெடுஞ்சாலைத் துறை சாலைகளுக்கென்று ஒரு தனி அளவுகோல் இருக்கின்றது; ஊராட்சி ஒன்றியச் சாலைகளுக்கென்று ஒரு தனி அளவுகோல் இருக்கின்றது. எனவே, ஊராட்சி ஒன்றியச் சாலைகளுக்கென்று இருக்கின்ற அளவுகோல்களின் அடிப்படையில் அந்தச் சாலைகள் மேம்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள அவருடைய தொகுதிக்குட்பட்ட பகுதியில் உள்ள சாலைகளை ஆய்வு செய்து, எந்தெந்தச் சாலைகளை உடனடியாக எடுத்துச் செய்ய வேண்டுமோ, அந்தச் சாலைகள் முழுவதும் உடனடியாக எடுத்து சீர் செய்யப்படும்.

ஏனென்று சொன்னால், இந்த நிதியாண்டிலேயே கிட்டத்தட்ட 9,225 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் 1,432 கோடி ரூபாய்ச் செலவில் மேம்படுத்தப்பட வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதனடிப்படையிலே மிகவும் பழுதுபட்ட சாலைகளை உடனடியாக எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அந்த வகையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலே உள்ள அந்தச் சாலைகளைக் கண்டறிந்து, அவை எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். ஊராட்சி ஒன்றியச் சாலைகள் இருக்கின்றன; அதற்கிடையிலே நெடுஞ்சாலைத் துறையிலும் சாலைகள் இருக்கின்றன; அதற்கடுத்தாற்போல் ஊராட்சிச் சாலைகள் இருக்கின்றன. இதுபோன்று பல்வேறு இடங்களிலே உள்ள ஊராட்சி ஒன்றியச் சாலைகளை நெடுஞ்சாலைத் துறை மூலமாக மேம்படுத்திட பல ஆண்டுக் காலமாக தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. இது அரசினுடைய policy matter என்று கூறுகிறார்கள்.

இதுதொடர்பாக நம்முடைய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும், நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் ஒருங்கிணைந்து, விடுபட்டுப் போன அப்படிப்பட்ட சாலைகளை, அந்தக் கிராமப்புறச் சாலைகளை, பேருந்துகள் செல்லக்கூடிய அந்தச் சாலைகளைச் செப்பனிடுவதற்கு உரிய நடவடிக்கையை எடுக்க முன்வருவார்களா என்று தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

2013 ஏப்ரல் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிற கோரிக்கை நியாயமான கோரிக்கை. இருந்தாலுங்கூட, ஒரு துறைக்குச் சொந்தமான ஒரு சாலையை இன்னொரு துறைக்குக் கொடுப்பதற்கு மனம் வராது. அதனடிப்படையிலே மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள், எந்தெந்தப் பகுதிகளில் உள்ள சாலைகளில் செப்பனிடும் பணிகள் எவ்வாறு தேவைப்படுகின்றன என்று கேட்கிறார்களோ, அவை மக்களுடைய பயன்பாட்டிற்கு உகந்ததாக இருக்கின்றபட்சத்தில், நிச்சயமாக அந்தப் பகுதிகளில் உள்ள சாலைகளை நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றுவதற்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதியோடு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டி தொகுதியில் உள்ள சாலைகளைப் போலவே, எங்களது திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சாலைகளும் மிகவும் பழுதுபட்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திண்டுக்கல் ஒன்றியச் சாலைகள்மீதும் கவனம் செலுத்தி, அக்கறையோடு எங்களுக்கும் நிதி ஒதுக்கி உதவி செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எனக்கு ஒரு ஆணையை வழங்கியிருக்கிறார்கள். அந்த ஆணையை இப்போது இந்த அவையிலே பகிர்ந்து கொள்வது சரியாக இருக்குமென்று

நான் கருதுகிறேன். காரணம், மாண்புமிகு உறுப்பினர் சகோதரி செல்வி கே. பாலபாரதி அவர்கள் எங்களுக்கும் அதுபோன்று நிதியொதுக்கிச் செய்வீர்களா என்று ஒரு சந்தேகக் கண்ணோடு ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குடிதண்ணீர்ப் பிரச்சினையைப் பற்றி ஆய்வு செய்கின்ற நேரத்தில், 'திண்டுக்கல் நகரத்திற்கு 5 நாட்கள், 10 நாட்கள் இடைவெளியில் தண்ணீர் வருவதாக அறிகின்றேன்; உடனடியாக அதை ஆய்வு செய்து அந்த நகரத்திற்கும், சுற்றுப்புறத்திற்கும் தண்ணீர் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும்' என்று நேரடியாக எனக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள் என்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாட்சிமை தங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், ஒரு முதலமைச்சர் என்ற நிலையில் இருந்தும், அதற்கும் மேலாக ஒரு தாயுள்ளத்தோடு, அனைத்து மக்களையும் பாதுகாக்கக்கூடிய ஒரு தாயாக விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனடிப்படையிலே சந்தேகத்தோடு வினா எழுப்பாமல், உரிமையோடு வினாவை எழுப்பி, உரிமையோடு அந்தப் பணியை நிறைவேற்றுவதற்கு நீங்கள் முன்வர வேண்டும்; நாங்களும் அதைச் செய்யத் தயாராக இருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 338, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

338—

மாம்பழக் கூழ் தொழிற்சாலை

***20454—திரு. வீ.பி. நாகைமாலி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்வேளூர் தொகுதியில் அதிக அளவில் மாம்பழங்கள் கிடைப்பதால், இப்பகுதியில் ஒரு மாம்பழக் கூழ் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?